# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO.137 / 2025

| Deposition of Witness for | Prosecution PW7<br>Defence<br>Court |
|---|---|

| | |
|---|---|
| Name | : Prakash |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 5th day of January, 2026.

**(Accused produced on Remand warrant)**

<u>சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**முதல் விசாரணை :**

நேரம் மதியம் 3.45 மணி

நான் தற்போது சென்னாகரணி கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் பெயர் ராஜா. 06-01-2025 அன்று ராஜா இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தார். மஞ்சுளா வீட்டிற்கு அருகே

விழுந்துவிட்டார். நான், மஞ்சுளா, விக்கி, தினகரன் ஆகியோர் ராஜாவை தூக்கிவிட்டோம். பின்னர் அவர் சென்றுவிட்டார். தூக்கிவிட்ட பிறகு ராஜா போனை காணோம் என்று விக்னேஷிடம் கூறினார். பின்னர் நாங்கள் சுந்தரம் தோட்டத்திற்கு சென்றோம். நான், விக்னேஷ், தினகரன், ராஜா ஆகியோர் சென்று சுந்தரம் தோட்டத்தில் தேடினோம். கிடைக்கவில்லை. பின்னர் ஏரிக்கு அருகில் ராஜா பாத்ரூம் சென்றதாக கூறினார். ஏழுமலை என்பவர் அங்கு மாடு மேய்த்துக் கொண்டிருந்தார். பூங்கொடி புதரில் இருந்தார். பூங்கொடியின் வாயில் மற்றும்காலில் இரத்தம் கீழெல்லாம் இருந்தது. DSP மறுநாள் காலை வீட்டருகில் வந்து விசாரித்தார். ஊத்துக்கோட்டை நடுவர் நீதிமன்றத்தில் இதுசம்பந்தமாக நான் சாட்சியம் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் குவிமுச 164 வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். குவிமுச 164–ன் Contradiction பகுதி **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**இந்நிலையில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் போலீசார் விசாரணையில் போனை தேடி சென்றுகொண்டிருந்தபோது சிறிது நேரத்தில் பூங்கொடியை ஏரியின் புதரில் யாரோ கெடுத்துவிட்டதாக பொது ஜனங்கள் கூச்சலிட்டு ஓடியதாகவும், நானும், பிரகாஷும் அங்கு சென்று பார்த்ததாகவும், அங்கிருந்தவர்கள் ராஜா, தினேஷுடன் வந்து பூங்கொடியின் அருகிலிருந்த செல்போனை எடுத்துக்கொண்டு சென்றதாகவும், அதை நான் கேட்டதாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

முதல் விசாரணையில் கூறிய விவரத்தை தான் போலீசாரின் விசாரணையின் போது கூறினேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் செல்போன் எடுத்த விவரம் எனக்கு தெரியாது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும்படி ஊத்துக்கோட்டை போலீசார் என்னிடம் கூறினார்கள் என்றால் சரிதான். போலீசார் சொன்னபடி தான் நீதிமன்றத்தில் நான் வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் என்னை விசாரிக்கும் போது ராஜா மது அருந்தியிருந்தார் என்றும் அவர் செல்போனை நாங்கள் தான் எடுத்தோம் என்று ராஜா கூறினார் என்று கூறினேன் என்றால் விக்னேஷும் ராஜாவும் குடித்திருந்தார்கள் நான் எலாவூர் சென்றிருந்து மாலை 4.00 மணிக்கு தான் நான், தினகரனும் வந்தோம். எதிரி நாங்கள் தான் செல்போனை எடுத்தோம் என்று கூறிவிடுவார் என்று கூறினேன். நீதிமன்றத்தில் ஏரிக்கரையில் ராஜா போன் கிடைக்கவில்லை என்று கூறினேனா என்றால் கூறவில்லை. 164 குவிமுச–ல் ராஜாவிற்கு சொந்தமான செல்போன் பூங்கொடிக்கு அருகில் இருந்தது என்றும் அதன் பின்பு ராஜாவின் இடுப்பில் இருந்தது என்று கூறியுள்ளேன் என்றால் இல்லை. பூங்கொடியை ஏரிக்கரையில் பார்த்த பிறகு அவரை வடமாநிலத்தவர்கள் தங்கியருந்த பகுதிக்கு ஊர் காரர்கள் அழைத்து சென்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வடமாநிலத்தவர்கள் தான் பூங்கொடியை அவ்வாறு செய்துவிட்டார்கள் என்று ஊரில் பேசிக் கொண்டிருந்தது எனக்கு தெரியும். நான் பார்க்கும்போது மஞ்சுளா வீட்டிற்கு அருகில் ராஜா விழுந்து கிடந்த மிதமிஞ்சிய போதையில் தான் இருந்தார் என்றால் சரிதான். நான் பார்க்கும்போது 4.00 மணியிருக்கும். ராஜாவிற்கு காலில் காயம் இருந்ததா என்றால் முட்டியில் மட்டும் சிராய்ப்பு காயம் இருந்தது. ஏழுமலை எங்கள் ஊர்காரரா என்றால் அவர் சென்னாகரணி கிராமத்தை சேர்ந்தவர். நானும் சென்னாகரணி கிராமத்தை சேர்ந்தவர். ராஜாவும் சென்னாகரணி கிராமத்தை சேர்ந்தவர். ஏழுமலைக்கு எதிரி ராஜா தெரியும் என்றால் சரிதான்.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO.137 / 2025

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW6<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Dinakaran |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 5th day of January, 2026.

**(Accused produced on Remand warrant)**

சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் மதியம் 3.25 மணி

நான் தற்போது சென்னாகரணி கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் பெயர் ராஜா. தேதி சரியாக ஞாபகமில்லை. 2025 ஆம் வருடம் ஜனவரி மாதம் 5 ஆம் தேதியா அல்லது 6 ஆம் தேதியா என்று

ஞாபகமில்லை. நானும், பிரகாஷூம் ஊருக்கு சென்றிருந்தோம். அப்போது விக்னேஷ் போன் செய்து இளநீர் மரத்தில் அறுக்கவேண்டும் என்று கூப்பிட்டார். நான் ஊருக்கு சென்றுவிட்டு அப்போது தான் வந்தேன். சம்பவம் குறித்து வேறு எதுவும் எனக்கு தெரியாது. ஏழுமலை என்பவர் கத்தி கூப்பிட்டார். ஊர் ஜனங்கள் எல்லோரும் சென்றோம். அந்த ஜனத்தில் பாட்டியை பார்க்கவில்லை. திரும்பி வந்துவிட்டேன். ஊத்துக்கோட்டை நடுவர் நீதிமன்றத்தில் குவிமுச 164 வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் குவிமுச 164ன் கீழான வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள். குவிமுச 164–ன் Contradiction பகுதி **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் போலீசார் விசாரணையில் கடந்த 06–01–2025 மாலை சுமார் 4.00 மணிக்கு நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த பிரகாஷூம் சென்னாகரணி காலனி மஞ்சுளா வீட்டிற்கு அருகில்சென்றிருந்தபோது எங்கள் ஊரைச்சேர்ந்த ராஜா என்பவர் மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்து கீழே விழுந்து கிடந்தார்கள் என்றும் அந்த சமயத்தில் பின்னால் வந்து மேட்டுக்கண்டிகையை சேர்ந்த விக்னேஷ் மஞ்சுளா ஆகியோர் ராஜாவை தூக்கி விட்டார்கள் என்றும் அப்போது ராஜா விக்னேஷை பார்த்து செல்போன் காணவில்லை என்றும் கண்டுபிடுத்து தருமாறு கூறியதாகவும் விக்னேஷூம் மோட்டார் சைக்கிலில் சென்று தேடியதாகவும், சிறிது நேரத்தில் ஏரியின் பக்கத்தில் ராஜா செல்போன் கிடைத்துவிட்டது என்று சொன்னதாகவும், பின்னர் ராஜா வேகமாக சென்றதாகவும், அவர் போன சிறிது நேரத்தில் எங்கள் காலனியை சேர்ந்த பூங்கொடி என்பவர் ஏரியின் புதரில் யாரோ கற்பழித்து விட்டு சென்றதாக ஜனங்களின் கூச்சல் சத்தம் கேட்டு ஜனங்கள் ஓடியதாகவும், நானும், பிரகாஷூம் ஏரியின் புதர் அருகே பூங்கொடி அம்மாவை பார்த்ததாகவும், அவர்

முகத்தில் இரத்தம் வடிந்தநிலையில், அவர் Urine போகுமிடத்தில் இரத்தம் வந்துகொண்டிருந்ததாகவும், அவர் மயக்க நிலையில் இருந்ததை பார்த்ததாகவும், அங்கிருந்தவர்கள் ராஜா விக்னேஷுடன் வந்து பூங்கொடி பக்கத்திலிருந்த செல்போனை எடுத்துக்கொண்டு சென்றதாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஊத்துக்கோட்டை நடுவர் நீதிமன்றத்தில் என்னை விசாரித்தபோது போலீசார் சொல்லி கொடுத்தை நான் சாட்சியமாக அளித்தேன் என்றால் சரிதான். அந்த சாட்சியத்தில் போலீசார் சொல்லி கொடுத்தன் பேரில் நான், விக்னேஷ், ராஜா, பிரகாஷ் நால்வரும் சம்பவயிடம் சென்றதாக கூறினேன் என்றால் சரிதான். அதேபோல் பாட்டியை பார்க்கவில்லை என்று முதல் விசாரணையில் கூறியுள்ளேன் ஊத்துக்கோட்டை நடுவர் நீதிமன்றத்தில் பாட்டியை ஏரிக்கரையில் அவர் இருந்த நிலைமையை பார்த்தேன் என்று போலீசார் சொல்லிக் கொடுத்தன் பேரில் கூறினேன் என்றால் சரிதான்.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO.137 / 2025**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW5 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : Vignesh |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 5th day of January, 2026.

**(Accused produced on Remand warrant)**

சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் மதியம் 2.55 மணி

நான் தற்போது சென்னாகரணி கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் பெயர் ராஜா. நான் SLV கம்பெனியில் வேலை செய்து வந்தேன். என்னுடைய விவசாய நிலம் சென்னாகரணி கிராமத்தில் உள்ளது. நான் அங்கு

செல்லும்போது ஏழுமலை மாடு மேய்த்துக் கொண்டிருந்தார். அவர் குரல் கொடுத்தார். ஒரு பாட்டியை கெடுத்துவிட்டதாக தகவல் கூறினார். புதர் அருகில் ஒருவர் ஓடியதாக கூறினார். அவர் யார் என்று நான் பார்க்கவில்லை. பின்னர் ஊர்காரர்கள் வந்தார்கள். பின்னர் ஆம்புலன்ஸ் வந்து பாட்டியை ஏற்றிக் கொண்டு சென்றார்கள். அவருக்கு Urine போகுமிடத்திலிருந்து இரத்தம் வந்து கொண்டிருந்தது. பின்னர் ஊரில் ராஜா என்பவர் கெடுத்துவிட்டதாகவும், அவரை போலீசார் பிடித்துவிட்டார்கள் என்று கூறினார்கள். 06-01-2025 அன்று ராஜா எங்கள் கழனிக்கு சென்று திரும்பும்போது மஞ்சுளா வீட்டின் அருகில் ராஜா விழுந்து கிடந்தார். அப்போது நான், தினகரன், மஞ்சுளா, பிரகாஷ் ஆகியோர் சேர்ந்து அவரை தூக்கிவிட்டோம். அப்போது ராஜா அவர் போனை காணோம் என்று கூறினார். ஏரியில் பாத்ரூம் சென்றேன் அங்குவிட்டுவிட்டேன் என்று கூறினார். நான் என் செல்போனிலிருந்து ராஜாவின் செல்போனிற்கு கால் செய்தேன். அப்போது மாடு மேய்த்துக் கொண்டிருந்து ஏழுமலை குரல் கொடுத்தார். பாட்டி ஏரிக்கு அருகில் வாயில் இரத்தத்துடன், கண் திறந்த நிலையில் பேசாமல் அமைதியாக இருந்தார். நாங்கள் காலனிகாரர்களுக்கு போன் செய்து வரவழைத்தோம். தினகரன் என்பவர் போன் செய்து ஊர் மக்களை அழைத்தார். பூங்கொடியின் உறவினர் அகிலா மற்றும் அவரது மகளை ராஜா அவரது இருசக்கர வாகனத்தில் சென்று அழைத்தார். பின்னர் ஊர் மக்கள் வந்துவிட்டார்கள். பின்னர் நான் வேலைக்கு சென்றுவிட்டேன். ஊத்துக்கோட்டை நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் குவிமுச 164 வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான், பிரகாஷ், தினகரன், ஷரத், ராஜா ஆகியோர் நண்பர்கள் என்றால் அனைவரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். சம்பவத்தன்று 06-01-2025 அன்று நான் அன்றைய தினம் காலையிலிருந்து சத்தியவேடு மற்றும் தாராட்சி ஆகிய இடங்களில் உள்ள மதுகூடங்களுக்கு சென்று காலை முதலே மது அருந்தியதாக

போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அன்றைய தினம் என் இருசக்கர வாகனத்தில் ராஜாவையும் மது அருந்துவதற்கு அழைத்து சென்றேன் என்றால் நானும் சரத்தும் சென்றோம் ராஜா வருகிறேன் என்று சொன்னார். எங்கள் கிராமத்திற்கு அருகில் உள்ள பெரம்பூரில் நிறுத்திவிட்டு எங்கள் வாகனத்தில் ராஜாவையும் அழைத்து சென்றோம். திரும்பவும் நாங்கள் மது வாங்கிவிட்டு எங்கள் கழனிக்கு அருகில் உள்ள சுந்தரம் என்பவர் கழனியில் மது அருந்தினோம் என்றால் சரிதான். அந்த இடத்தில் 12.30 மணிக்குமேல் நானும், சரத்தும் கிளம்பி சென்றோம் என்றால் நான் என் பைக்கில் சென்றுவிட்டேன். ராஜா அவரது இருசக்கர வாகனத்தில் தனியாக சென்றுவிட்டார். நான் திரும்ப 3.30 மணியளவில் சென்னாகரணிக்கு வரும்பொழுது மஞ்சளா வீடடிற்கு அருகில் வரும்பொழுது ராஜா நினைவில்லாமல் மஞ்சுளா என்பவர் வீட்டருகே மோட்டார் சைக்கிளுடன் கீழேவிழுந்து கிடந்தார் என்றால் சரிான். அப்போது அந்த சமயத்தில்  தினகரன், பிரகாஷூம் அங்கு வந்திருந்தார்கள் என்றால் சரிதான். ராஜா செல்போனை கண்டுபிடிப்பதற்கு நான் மட்டும் சென்றேனா என்றால் நான், ராஜா மற்றும் தினகரன், பிரகாஷ் ஒரே திசையில் சென்றோம். முதலில் நாங்கள் மது அருந்திய பம்புசெட் அருகில் சென்று தேடினோம் என்றால் சரிதான். அந்த இடத்திற்கு நாங்கள் செல்லும்போது அங்கு வேறு யாராவது இருந்தார்களா என்றால் அந்த கழனியில் சுந்தரம் இருந்தாரா என்று சரியாக தெரியாது. அந்த சமயத்தில் தான் ஏழுமலையின் சத்தம் கேட்டு ஏரிகரைக்கு சென்றோம் என்றால் சரிதான். அங்கிருந்து தான் நான் தினகரன் மூலமாக ஊர்காரர்களுக்கு தகவல் கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரி ராஜா பூங்கொடியின் உறவினர்களுக்கு தகவல் கொடுப்பதற்காக அவருடைய இருசக்கர வாகனத்தில் சென்றார் என்றால் சரிதான். எனக்கு தகவல் சொன்ன ஏழுமலை ஒரு நபர் ஓடியதாகவும், அவருக்கு சுமார் 40 வயதிருக்கும் என்று கூறினாரா என்றால் ஆள் ஓடியதாக தான் கூறினார். ஏழுமலைக்கு எதிரி ராஜாவை ஏற்கனவே தெரியும் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் என்னை குவிமுச 164 ன் கீழ் விசாரித்தபோது நாங்கள் நால்வரும் சம்பவயிடத்திற்கு போய் அந்த பாட்டியை பார்த்ததாக கூறியதை போலீசார்

விசாரணையில் கூறினோமா என்றால் கூறினோம். போலீசார் விசாரிக்கும்போது நானும் ராஜாவும் மட்டும் சென்றதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான்கு பேரும் சென்றதாக கூறியுள்ளேன். நாங்கள் அங்கு சென்றபோது அந்த பாட்டியை நெடுஞ்சாலை பாலப்பணி நடைபெறும் வடமாநிலத்தவர்கள் தங்கியிருக்கும் இடத்திற்கு கொண்டு சென்றோம் என்றால் பாட்டியை நான் பார்க்கவில்லை. ஊர்காரர்கள் அங்கிருந்தார்கள். பூங்கொடி பாட்டியை வடமாநிலத்தவர்கள் தங்கியிருக்கும் இடத்திற்கு அழைத்து சென்றதை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. ஊர்காரர்கள் அனைவரும் வடமாநிலத்தவர்கள் தங்கியிருக்கும் இடத்திற்கு சென்றதை நான் பார்த்தேன். ஊர்காரர்கள் ராஜா தான் அவ்வாறு செய்தார் என்று கூறிய ஊர்காரர்கள் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஊரில் அவ்வாறு பேசிக்கொண்டார்கள். அன்றைய தினம் ராஜா அளவுக்கு அதிமாக காலையிலிருந்து மதுபோதையில் இருந்தார் என்றால் சரிதான். அவருக்கும் அன்றைய தினத்தில் வாகனத்திலிருந்து விழுந்து காயம்பட்டிருந்தது என்றால் சரிதான்.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO.137 / 2025**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW4 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : Aramatha |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 5th day of January, 2026.

**(Accused produced on Remand warrant)**

சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் மதியம் 2.40 மணி

நான் தற்போது சென்னாகரணி கிராமத்தில் வசித்து வருகிறேன். பூங்கொடியை எனக்கு தெரியும். பாலவாக்கத்தில் 100 நாள் வேலைக்காக வந்து பின்னர் சென்னாகரணி கிராமத்திலுள்ள அவர் மகள் அகிலா வீட்டிற்கு வருவார். என்

வீட்டின் வழியாக தான் வருவார். என் வீடு ஏரி பக்கத்தில் உள்ளது. பொதுமாக மாலையில் வேலை முடித்து வந்து பாத்தூரும் செல்வதற்காக வந்து ஏரிக்கு செல்வார். போன வருடம் ஜனவரி மாதம் தேதி ஞாபகமில்லை. அன்று பூங்கொடி பாத்தூருக்கு ஏரி பக்கம் செல்வதை பார்த்தேன். மாலை சுமார் 5.00 மணியளவில் அனைவரும் கத்தினார்கள். நான் சத்தம் கேட்டு ஓடி சென்று பார்த்தபோது பூங்கொடியின் வாயில் துணி வைத்து அடைகப்பட்டிருந்தது. பூங்கொடியின் மேல் துணியில்லை. கால்வழியாக இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. பூங்கொடியின் Urine போகும் இடத்தில் இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. ராஜா என்ற பையன் பூங்கொடியை கற்பழித்துவிட்டதாக அங்கிருந்தவர் கூறினார்கள். அவருடைய மகள் அகிலா பூங்கொடிக்கு மேலாடை போட்டுவிட்டு ஆம்புலன்ஸிற்கு போன் செய்தார். பின்னர் ஆம்புலன்ஸ் வந்து மருத்துவமனைக்கு பூங்கொடியை எடுத்து சென்றார்கள். அகிலாவும் அவரது மகள் நீலாவதியும் மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் சென்னாகரணி கிராமத்தில் வசித்து வருகிறேன். அங்கு ஒரு காலனி தான். எங்கள் வீட்டை தாண்டி தான் பாலவாக்கம் செல்லவேண்டும் என்றால் சரிதான். பாலவாக்கத்திலிருந்து 100 நாள் வேலை முடித்துவிட்டு வரும்பொழுது பொதுவாக பூங்கொடியை 3.00 மணிக்கு பார்த்தேன். சம்பவத்தன்று 3.00 மணிக்கு ஏரிக்கு செல்லும்போது பூங்கொடியை பார்த்தேன். அதன்பிறகு நான் எங்கு சென்றேன் என்றால் நான் பூ கட்ட சென்றிருந்தேன். பின்னர் பூ கட்டி முடித்துவிட்டு சத்தம் கேட்டு சுமார் 4.00 மணியளவில் வந்தேன். எனக்கு யார் சொல்லி பூங்கொடி ஏரி புதரில் இருந்தார் என்று தெரியவந்தது என்றால் சாட்சிகள் நீலாவதி மற்றும் அகிலா சத்தம் போட்டு கொண்டு சென்றார்கள் அவர்கள் பின்னால் நானும் சென்றேன். பூங்கொடியின் வாயில் துணி இருந்தது மற்றும் உடையில்லாமல் இருந்தது பற்றி நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சொன்னார்கள். நான் பார்க்கும்போது பூங்கொடி சுயநினைவுடன் இருந்தாரா என்றால் பேசும் நிலையில் இல்லை. என்னிடம் பூங்கொடி எந்த தகவலும் சொல்லவில்லை

என்றால் சரிதான். நான் சம்பவம் சென்றபோது அங்கு பூங்கொடியை தவிர நான், நீலாவதி, அகிலா ஆகியோரை தவிர வேறு யார் யார் இருந்தார்கள் என்றால் ஊர் ஜனங்கள் இருந்தார்கள் சுமார் 50 பேர் இருந்திருப்பார்கள். பூங்கொடிக்கு காயம் பட்ட இடத்திலிருந்து சிறிது தொலைவில் தான் நெடுஞ்சாலைத்துறை பாலம் கட்டும் பணி நடந்துவருகிறது என்றால் சரிதான். அங்கு நிறைய வட மாநிலத்தவர்கள் தங்கி வேலை செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். பூங்கொடியை சம்பவயிடத்திலிருந்து முதலில் வடமாநிலத்தவர் தங்கியிருந்த இடத்திலிருந்து தான் தூக்கி சென்றார்கள் என்றால் சரிதான். இந்திகாரர்கள் தான் பூங்கொடியை அவ்வாறு செய்துவிட்டார்கள் என்று சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். நான் அங்கு சென்றேன். நான் சம்பவம் நடந்த ஏரிக்கு செல்லவில்லை. மேற்படி விவரத்தை போலீசாரிடம் தெரிவித்தேன். அதை தவிர வேறு எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். சம்பவம் குறித்து வேறு யாரும் எந்த தகவலும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் கத்திக் கொண்டிருந்தார்கள். அகிலாவும், நீலாவதியும் கத்திக் கொண்டிருந்தார்கள் என்றால் நிறைய பேர் கத்திக் கொண்டிருந்தார்கள்.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.